DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVADANAI

| | | |
|---|---|---|
| Calendar | ... | |
| Miscellaneous | ... | |
| Preliminary Register | ... | Case No: C.C No. 57/2022 |
| Session | ... | |
| | | Prosecution / PW-1 |
| Deposition of Witness for | ... | Defence / Court |

---

| | | |
|---|---|---|
| Name | : | திரு.முருகேசன் |
| Father's Name (or) | | |
| Husband Name | : | த/பெ.சேது |
| Village | : | சோழந்துார் |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

(A1, A2 are absent U/s.317 Cr.P.C petition filed heard and allowed.. )

Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 the day of 04.12.2023

---

<u>முதல் விசாரணை</u>

1. நான் சோழந்துார் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் திருப்பூரில் தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. நான் பார்த்தது இல்லை.

2. 2013ம் வருடம் தேதி, மாதம் நினைவில் இல்லை. நான் திருப்பூரில் குடும்பத்துடன் வசித்து வந்தேன் எனது பெற்றோர்கள் சோழந்தூர் கிராமத்தில் வசித்து வருகிறார்கள். எனது பெற்றோர்கள் வேலைக்கு சென்றுவிட்டு மாலை 05.00 மணியளவில் வீட்டுக்கு வந்து வீட்டை பார்த்தபோது வீட்டின் பின்புறம் கதவு உடைக்கப்பட்டு பீரோவில் இருந்த தாலி செயின் 3–1/2 பவுன், கழுத்து செயின் 1–1/2 பவுன், கைசெயின் 1–1/2 பவுன் ஆகிய நகைகள் காணாமல் போய் இருந்தது.

3. இது சம்பந்தமாக மறுநாள் நான் திருப்பாலைக்குடி காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார்மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான், அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும் **(புகார்மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** அதன்பின்பு போலிசார் தகவல் சொல்லி இராமநாதபுரம் நீதிமன்றத்தில் மனு செய்து மேற்படி நகைகளை பெற்றுக் கொண்டோம். தற்போது காட்டப்படும் நகைகள் தான் அந்த நகைகள் **சா.பொ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது,** இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. எதிரிகள் யாரையும் நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றும் போலிசார் சொன்னதன்பேரில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. புகாரை மறுநாள் வந்து நான் தான் கொடுத்தேன்.